ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி என்பவற்றின் வைப்பாளர்களுக்குரிய அறிவித்தல்.

2011 ஆம் அண்டின் 42 ஆம் இலக்க நிதி வியாபாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் பிரகாரம், நிதி வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்கு சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி ஆகிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் முறையே 05.03.2018, 25.07.2018, 19.09.2019 மற்றும் 22.05.2020 இல் இரத்துசெய்யப்பட்டுள்ளதோடு ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி ஆகியவற்றின் வியாபாரங்களும் 13.07.2020 இல் இடைநிறுத்தப்பட்டன. அதற்கிணங்க, இலங்கை மத்திய வங்கியானது ஏற்கனவே சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட், த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி ஆகிய கம்பனிகளின் வைப்பாளர்களுக்கு அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகளுக்கு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் (SLDILSS) ஏற்பாடுகளின் படி உயர்ந்த பட்சம் ரூ.600,000 என்ற நியதிக்குட்பட்டு இழப்பீட்டைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

பின்னர், இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்திலிருந்து வைப்பாளர்களுக்கு உயர்ந்தபட்ச மேலதிக நிவாரணத்தை வழங்கும் நோக்குடன் உயர்ந்தபட்ச இழப்பீட்டுத் தொகையை ரூ.600,000 இல் இருந்து ரூ.1,100,000 ஆக அதிகரிப்பதற்குத் தீர்மானித்திருந்தது.

கீழே கூறப்பட்ட பின்வரும் நடைமுறைகளுக்கு அமைவாக, சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட் என்பவற்றின் வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகளுக்கான மிகுதிக் இழப்பீட்டுக் கொடுப்பனவு 'இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின்' ஊடாக மத்திய வங்கியால் நேரடியாக அவர்களது குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கணக்கிற்கு வரவிடப்படும். த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி ஆகியவற்றின் வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் முகவர் வங்கியாக நியமிக்கப்பட்ட மக்கள் வங்கியின் ஊடாகச் செலுத்தப்படும்.

**முகவர் வங்கி (மக்கள் வங்கி) ஊடான இழப்பீட்டுக் கொடுப்பனவுச் செயன்முறை**

ரூ.600,000 இற்கும் அதிகமான ஒரு காப்புறுதி செய்யப்பட்ட வைப்புத் தொகையைக் கொண்டிருக்கும் த பினான்ஸ் கம்பனி பிஎல்சி, ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி ஆகியவற்றின் வைப்பாளர்கள் மக்கள் வங்கியிலிருந்து ரூ.500,000 வரை அவர்களது மிகுதி இழப்பீட்டுக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியும். ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் உடைய வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள் 09.04.2021 தொடக்கம் மக்கள் வங்கியின் ஊடாக அவர்களது இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். த பினான்ஸ் கம்பனி பிஎல்சி உடைய வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள் 12.04.2021 தொடக்கம் மக்கள் வங்கியில் இருந்து அவர்களது இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ள முடியும். இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவக் குழுவின் மேற்பார்வையின் கீழ் சுவர்ணமஹால் பினான்ஸியல் சேர்விசர்ஸ் பிஎல்சி ஆல் தனது வைப்பாளர்களுக்கு தற்போது மீள் கொடுப்பனவு செய்யப்படுவதால் குறிப்பிட்ட காலத்துள் நிறைவடைந்ததும் அதனுடைய இழப்பீட்டுக் கொடுப்பனவுத் திகதி வெகு விரைவில் அறிவிக்கப்படும்.

அதற்கிணங்க, வைப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள், அடையாள அட்டை விபரங்கள் மற்றும் ஏனைய வேண்டப்பட்ட ஆவணங்கள் ஆகியனவற்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் த பினான்ஸ் கம்பனி பிஎல்சி என்பவற்றின் வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் இருந்து (முன்னைய கோரல்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட அதே கிளைகள் விரும்பத்தக்கது) தங்களது கோரல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**இலங்கை மத்திய வங்கி ஊடான இழப்பீட்டுக் கொடுப்பனவுச் செயன்முறை**

சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரிகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட் என்பவற்றில் ரூ.600,000 அதிகமான காப்புறுதி செய்யப்பட்ட வைப்பைக் கொண்டுள்ள ஏற்கனவே இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் கீழ் அவர்களுக்குரிய இழப்பீட்டுக் கொடுப்பனவைப் பெற்றுக் கொண்டவர்கள் கீழே குறித்துரைக்கப்பட்ட மாதிரியின் படி இலங்கை மத்திய வங்கிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட அதே ஆவணங்களை பயன்படுத்துவதற்கான தங்கள் ஒப்புதலை வெளிப்படுத்தவதற்கு முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட ஒப்புதல் படிவத்தை சமர்ப்பிக்குமாறு இத்தால் வேண்டப்படுகிறார்கள். மேலும், கூட்டு வைப்பாளர் உள்ளடங்கலாக ஒவ்வொரு வைப்பாளரும் ஒவ்வொரு கம்பனி சார்பிலும் வெவ்வேறான ஒப்புதல் படிவங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள். நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு வைப்புப் புத்தகம் என்பவற்றின் மூலப்பிரதியை ரூ.600,000 என்ற முதலாவது கொடுப்பனவின் பிறகு மத்தியவங்கியில் இருந்து பெற்றுக் கொண்ட வைப்பாளர்கள் அல்லது சட்டப் பயனாளிகள் அத்தகைய மூல சான்றிதழ்களையும் புத்தகங்களையும் மீளச் சமர்ப்பிக்கும் படி வேண்டப்படுகிறார்கள்.

ஒப்புதல் படிவம் மற்றும் முன்னர் வெளியிடப்பட்ட பிரகடனத்துடன் கூடிய உரிமை கோரல் படிவம் ஆகியன மத்திய வங்கியின் இணையதளமான www.cbsl.gov.lk இல் கிடைப்பதோடு அவற்றின் பிரதிகள் தலைமைக் காரியாலயத்திலும் மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா, கிளிநொச்சி ஆகிய மத்திய வங்கியின் பிராந்திய காரியாலயங்களிலும் கிடைக்கும். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட ஒப்புதல் படிவம் 20.04.2021 இல் அல்லது அதற்கு முன்னரோ இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தின் தபால் அறையில் நேரடியாகக் கையளிக்கப்படவோ அல்லது பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பப்படவோ முடியும். கடித உறையின் இடதுகைப் பக்க மேற்பகுதியில் ஏற்புடையதான விதத்தில் "CIFL" அல்லது "TSCFL" அல்லது "TKSFL" என்று தயவு செய்து குறிப்பிடவும். கீழே வழங்கப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் ஊடாக மத்தியவங்கியின் தலைமைக் காரியாலயத்தில் இருந்து மேலதிக விடயங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர்,**
**தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**இல: 30 சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு 01.**

**மேலதிக விசாரணைகளுக்காக:**
**011 – 2477261**
**011 – 2398788**
**011 – 2477000**

---

## ஒப்புதல் படிவம்

**சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட், ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றின் வைப்பாளர்களுக்கான இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் ஊடான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்**

**அலுவலக அடையாள இலக்கம்:**
**(அலுவலக உபயோகத்துக்கு மட்டும்)**

பொதுவான அறிவுறுத்தல்கள்

1. ரூ.600,000 அதிகமான வைப்பைக் கொண்டுள்ளதோடு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் (SLDILSS) கீழ் அவர்களுக்குரிய இழப்பீட்டுக் கொடுப்பனவை ஏற்கனவே பெற்றுக் கொண்ட சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (CIFL), த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட் (TSCFL), ரிகேஎஸ் பினான்ஸ் லிமிட்டெட் (TKSFL) ஆகியவற்றின் வைப்பாளர்களுக்கு மட்டுமே ஒப்புதல் படிவம் ஏற்புடையது.
2. அ, ஆ, இ ஆகிய மூன்றுபகுதிகளை இவ் ஒப்புதல் படிவம் உள்ளடக்கியுள்ளது.,
   - அ) பகுதி-(அ) இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழான இழப்பீட்டுக் கொடுப்பனவின் மீதியை முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பிரகடனத்துடன் கூடிய உரிமைகோரல் படிவம் மற்றும் தொடர்புடைய ஏனைய தகவல்களின் அடிப்படையில் செய்முறைப்படுத்துவதற்கான ஒப்புதலை வழங்குவதற்கு இப்படிவத்தின் இப்பகுதி முறையாகப் பூரணப்படத்தப்பட வேண்டும்.
   - ஆ) பகுதி-(ஆ) ரூ.600,000 என்ற முதலாவது இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டதன் பின் வைப்பாளர்களின் விபரங்களின் மாற்றங்களைக் குறிப்பிட ஒப்புதல் படிவத்தின் இப்பகுதி முறையாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.
   - இ) பகுதி-(இ) காசோலை மூலமாக இழப்பீட்டைப் பெற்றுக் கொண்ட சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய சட்டப் பயனாளிகளுக்கு மட்டும் ஒப்புதல் படிவத்தின் இப்பகுதி ஏற்புடையது.
3. ரூ.600,000 முதலாவது கொடுப்பனவின் பின் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து தங்களது மூலப் பிரதிகளைப் பெற்றுக் கொண்ட வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் மீதிக் கொடுப்பனவையும் உரிமை கோருவதற்கு அத்தகைய அனைத்துச் சான்றிதழ்களையும் மீளச் சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் தங்களது சான்றிழ்கள் அனைத்தையும் சமர்ப்பிக்காத வைப்பாளர்கள் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் மீதிக் கொடுப்பனவையும் உரிமை கோருவதற்கு தங்களது மிகுதிச் சான்றிதழ்களை, கீழே பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டவாறு பிரகடனத்துடனான புதிய முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உரிமைகோரல் படிவத்துடன் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.
4. கூட்டு வைப்பாளர் உள்ளடங்கலாக ஒவ்வொரு வைப்பாளரும் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளியும் ஒவ்வொரு கம்பனிக்காகவும் வெவ்வேறான ஒப்புதல் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
5. பின்வரும் சூழ்நிலைகளில் சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி, த ஸ்ராண்டட் கிறடிற் பினான்ஸ் லிமிட்டெட் மற்றும் ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிட்டெட் ஆகியனவற்றின் வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள் பிரகடனத்துடனான புதிய முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உரிமை கோரல் படிவம் (இலங்கை மத்திய வங்கியின் இணையதளத்தில் www.cbsl.gov.lk முன்னர் பிரசுரிக்கப்பட்டது) மற்றும் தொடர்புடைய தகவல்கள் மற்றும் அதில் கூறப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் படி வேண்டப்படுகிறார்கள்.
   - அ) இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் இழப்பீட்டுக் கொடுப்பனவை உரிமை கோருவதற்கு அவர்களது பிரகடனத்துடனான உரிமை கோரல் படிவத்தை இன்னும் சமர்ப்பிக்காத வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள்.
   - ஆ) வங்கிக் கணக்கை மூடுதல் அல்லது அதன் செயற்படாத தன்மை காரணமாக முன்னர் சமர்ப்பித்த வங்கிக் கணக்கு விபரங்கள் செல்லுபடியற்றிருத்தல் (காசோலை மூலமாக இழப்பீட்டைப் பெற்றுக் கொண்ட சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வைப்பாளர்களுக்கு ஏற்புடையதல்ல).
   - இ) நிலையான வைப்புச் சான்றிதழ் அல்லது சேமிப்புப் புத்தகங்கள் என்பனவற்றினை சமர்ப்பிக்காத அல்லது முன்னர் சமர்ப்பித்த பிரகடனத்துடனான உரிமை கோரல் படிவத்தில் அனைத்துத் தகுதிவாய்ந்த வைப்புக்களையும் சரியாகக் குறிப்பிடாத வைப்பாளர்கள் அல்லது தொடர்புடைய சட்டப் பயனாளிகள்.
   - ஈ) ரூ.600,000 என்கின்ற முன்னைய இழப்பீட்டிற்குப் பின்னர் ஒரு வைப்பாளர் மரணிக்கின்ற பட்சத்தில் தொடர்புடைய சட்டப் பயனாளி பிரகடனத்துடன் கூடிய உரிமை கோரல் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
6. வைப்பாளர் அல்லது கூட்டு கணக்கு வைத்திருப்பவர் தன்னுடைய சொந்த ஒப்புதல் படிவத்தை சமர்ப்பித்தால் உரிய வைப்பாளர், ஒப்புதல் படிவத்தின் 'இ' பகுதியின் பிரகடனப் பகுதியின் கீழ் (குறிப்பாக பிரிவு 6 ) "உரிமை கோருபவரின் பெயர் அல்லது சட்டப் பயனாளி" மற்றும் "வைப்பாளரின் பெயர்"ஆகிய இரண்டுக்கும் எதிரே தன்னுடைய பெயரைக் குறிப்பிட வேண்டும்.

### பகுதி- (அ)

**முதலில் சமர்ப்பிக்கப்பட்ட பிரகடனத்துடன் கூடிய உரிமை கோரல் படிவம் மற்றும் தொடர்புடைய தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மீதி இழப்பீட்டுக் கொடுப்பனவைச் செய்முறைப்படுத்துவதற்கான ஒப்புதலை வெளிப்படுத்தல்.**

1. கம்பனியின் பெயர்: ..........................................................
2. வைப்பாளரின் முழுப்பெயர்:..........................................................
3. அடையாள அட்டை இலக்கங்கள்:

   தேசிய அடையாளஅட்டை அல்லது வணிகப்பதிவு ..............................
   இலக்கம் .............................. கடவுச்சீட்டு இலக்கம் ..............................
   சாரதி அனுமதி அட்டை இலக்கம்..........................................................
4. தொலை பேசி இல:- நிலையான:....................செல்லிடப் பேசி:..............................
5. முன்னர் உரிமை கோரல் படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட அதே வங்கிக் கணக்கிலக்கத்திற்கு இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழான இழப்பீட்டுக் கொடுப்பனவு மீதியை பெற்றுக் கொள்ள உடன்படுவதோடு வழங்கப்பட்ட வங்கிவிபரத்தின் துல்லியத் தன்மையின் முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். (தயவுசெய்து தெரிவுப் பெட்டியில் சரி (✓) இடவும்) ☐
6. பிரகடனம்

..............................(உரிமை கோருபவரின் முகவரி)என்ற முகவரியினைச் சேர்ந்த .............................. ஆகிய நான் (உரிமை கோருபவரின் அல்லது சட்டப் பயனாளியின் பெயர்) இக் கோரல் (வைப்பாளாரின் பெயர்)..............................சார்பில் செய்யப்பட்டது என்றும் ரூ.600,000 இழப்பீட்டை நான் முன்பு ஏற்கனவே பெற்றுக் கொண்டேன் என்றும் கூறுகிறேன். சொல்லப்பட்ட ரூ.600,000 என்ற முதலாவது கொடுப்பனவுக்காக முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட எனது உரிமை கோரல் படிவத்தின் அடிப்படையில் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழ் எனது இரண்டாவது கொடுப்பனவைப் பெறுவதற்கு நான் இத்தால் உடன்படுகிறேன். மேலும் அதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

உரிமை கோருபவரின் கையொப்பம்:..............................

உரிமை கோருபவர் இதன் உள்ளடக்கங்களை வாசித்துப் புரிந்து கொண்டு ..........இல் .......திகதி ........மாதம்........ஆண்டு என் முன்னால் பிரகடனப்படுத்திக் கையொப்பமிட்டார்.

கையொப்பம்: ..............................

சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சமாதான நீதவான்

உத்தியோக பூர்வ முத்திரை

### பகுதி- (ஆ)

**ரூ.600,000 இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டதற்குப் பின்னர் வைப்பாளர்களின் விபரங்கள் மாறி இருப்பின் மட்டும் 'பகுதி (ஆ)' இல் பூரணப்படுத்தப்பட வேண்டும்.**

1. கம்பனியின் பெயர்:- ..........................................................
2. வைப்பாளரின் பெயர்:-..........................................................
3. உரிமை கோருபவரின் அல்லது சட்டப் பயனாளியின் பெயர்:-..............................
4. தற்போதைய முகவரி:-..........................................................
5. தொலைபேசி இலக்கங்கள்:- நிலையானது:- .............................. செல்லிடப்பேசி:-....................
6. இரண்டாவது கொடுப்பனவைப் பாதிக்கின்ற ஏதாவது ஏனைய மாற்றங்கள் இருந்தால்....................
   ..........................................................
7. முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கு மூடப்பட்டிருத்தல் அல்லது தற்போது செயற்படாதிருக்கும் பட்சத்தில் பிறிதொரு இயங்கு நிலையிலுள்ள வங்கிக் கணக்கின் விபரங்கள், முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட உரிமை கோரல் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நான் முழுமையாகப் புரிந்துகொண்டு ஏற்றுக் கொண்டேன் அதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. (இது காசோலை மூலம் இழப்பீட்டைப் பெற்றுக் கொண்ட பகுதி - (இ) ஐ பூரணப்படுத்துமாறு வேண்டப்பட்ட வைப்பாளர்கள், சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வைப்பாளர்கள் தவிர ஏனையவைப்பாளர்களுக்கு மட்டும் ஏற்புடையது)

..............................

வைப்பாளர் அல்லது உரிமை கோருபவரின் கையொப்பம்.

### பகுதி- (இ)

**காசோலை மூலமாக இழப்பீட்டுக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட சென்றல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி வைப்பளர்களிற்கு மட்டும் ஏற்புடையது.**

1. இழப்பீட்டை மேற்கொள்வதற்கான வைப்பாளர்களுடைய வங்கிக் கணக்கு விபரங்கள்

1.1 கணக்கை வைத்திருப்பவருடைய பெயர்:-..............................

1.2 வங்கியின் பெயர்:-.............................. 1.3 வங்கிக் கணக்கு இலக்கம்:-..............................

1.4 கணக்கைப் பேணும் வங்கிக் கிளையின் பெயர்:- ..............................

(பகுதி -(இ) உடன் வங்கிக் கூற்று அல்லது வங்கிப் புத்தகத்தின் ஒரு பிரதி இணைக்கப்பட வேண்டும்)

இதில் வழங்கப்பட்ட தகவல் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதி செய்து சான்று செய்வதோடு, இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டத்தின் கீழான இழப்பீட்டுக் கொடுப்பனவின் மீதி மேலுள்ள விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வங்கிக் கணக்கிற்கு வைப்பு செய்யப்படும் என்பதையும் நான் முழுமையாகப் விளங்கிக்கொண்டு உடன்படுகின்றேன்.

..............................

உரிமை கோருபவரின் கையொப்பம்